1987 ஏப்ரல் 24]

(முற்பகல் 10-20)

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாடிப்பட்டி தாலுக்கா உசிலம்பட்டி கோட்டத்தில் இணைவது பற்றி பரிசீலிக்கப்பட்டது. தற்போது அது மதுரைக் கோட்டத்தில் இணைந்துள்ளதால், அதை வலியுறுத்தவில்லை. முடுவார்பட்டி பிர்க்கா வாடிப்பட்டி வட்டத்தில் இருப்பது அந்த மக்களுக்கு மிகச் சிறப்பாக இருக்குமென்று கூறுகிறார்கள். அதோடு வாடிப்பட்டி தாலுக்கா என்று ஏற்படுத்திய பின்னாலே, அதற்குரிய நீதிமன்றங்கள், ஆஸ்பத்திரி வசதிகள் போன்றவைகள் அங்கே ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றன. அங்கே தாலுக்கா அலுவலகம் திறக்கப்படவில்லை. இவை குறித்து சீக்கிரம் நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, வாடிப்பட்டி தனி வட்டமாக தகுதி உயர்த்தப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதனைச் செம்மைபடுத்துவதற்கும், அந்த வட்டத் தலைநகரிலே நடைபெற வேண்டிய நிர்வாகப் பணிகளை சீராக, செம்மையாக நடத்த முயற்சிகளை அந்தந்தத் துறையினர் மேற்கொள்கின்றனர். அது முறைப்படி மேற்கொள்ளப்படும். இந்தக் கேள்வியைப் பொறுத்து முழு விவரம் இல்லாததால் அதைச் சொல்வதற்கில்லை. ஆனால் வட்டத் தகுதி நிலையை உயர்த்த வருவாய்த் துறையினர் தக்கபடி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைத்தல்.

(478—*வினா எண். 893)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சேலத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) சேலத்தில் நிலம் கையகப்படுத்தி, தக்க கட்டிடங்கள் கட்டி கல்லூரியை ஆரம்பிக்கும் வரை, அங்கு சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக 1985–86ஆம் கல்வி ஆண்டு முதலாக 77 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிகளில் படித்து வருகின்றனர்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா என்ற வினாவோடு, இன்றைக்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமும் அது பற்றி வந்திருக்கிறது. இப்படி வருவதனால் அமைச்சர்களுக்கு நேரம் வீணாகிறது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரத்தை வீணாக்க வேண்டாம். கேள்வி நேரத்தில் ஆலோசனை சொல்ல வேண்டாம்.

டாக்டர் ந. மாசிலாமணி : தற்போது சேலம் மருத்துவக் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் சேர்த்திருக்கிறார்கள். அந்த மாணவர்களை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்திற்கு என்று தனியாக மாணவர்களை நாம் சேர்த்தாலும், ஏற்கனவே இருக்கின்ற எண்ணிக்கைக்குக் கூடுதலாக நாம் மாணவர்களை எடுக்கவில்லை. ஏற்கனவே செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியிலே படிக்கும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலே படிக்கும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலே படிக்கும் சில மாணவர்களை சேலத்திற்கு என்று ஒதுக்கியிருக்கிறோம். இந்தக் கல்லூரிக்காக தனித்தனியாக அங்கே மாணவர்களைச் சேர்க்கவில்லை.

டாக்டர் கே. சமரசம் : மாண்மிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் அமைக்க இருக்கும் மருத்துவக் கல்லூரிக்கு நிலம் ஆர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதா? எவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது? எப்போது கட்டிடங்கள் கட்ட உள்ளார்கள்? எப்போது அது முழுமையாக நிறைவு பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்னும் இடத்தையே சரியாகத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. எங்கே நிலத்தைக் கையகப் படுத்துவது என்பது சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சேலத்திற்குச் சென்ற போது, அவரே நேரடியாகப்

1987 ஏப்ரல் 24]

பார்த்து, சேலம் ஸ்டீல் பிளாண்டுக்குப் பக்கத்தில் நிலத்தை இதற்காக ஒதுக்கித் தரலாம் என்றும், அங்கே கட்டலாம் என்றும் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நிலத்தைக் கையகப்படுத்த சேலம் மாவட்ட ரெயில்வே செஸ் ஃபண்டிலிருந்து 56,81,000 ரூபாய் தருவதற்கு இசைந்திருக்கிறார்கள். அதை வைத்து நிலம் கையகப்படுத்திய பிறகு, கட்டிடம் கட்டும் வேலை தொடங்கப்படும்.

திரு. சு. சிவராஜ் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கையில் சேலத்திலே புதிய மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதைத் தவிர தமிழகத்திலே புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க உத்தேசமுள்ளதா? தனியார் யாராவது தொடங்க முன் வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் அன்றி, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையில் ஒன்று போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் துவக்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. தனியார்கள் 3 கல்லூரிகளைத் துவக்க ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. மற்றும் சிலர் மனு போட்டிருக்கிறார்கள். அவற்றை இப்போது அரசு பரிசீலிப்பதாக இல்லை.

மேட்டூர் நீர்த்தேக்கம் அருகிலுள்ள தொழிற்சாலை கழிவுநீர்.

479—(*வினா எண். 3169)—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் நீர்த்தேக்கம் அருகில் உள்ள பகுதிகளில் தொழிற்சாலை கழிவுநீரின் ரசாயன கலவை கலந்துவிடுவதால் அங்கு தோண்டப்படும் ஆழ்துளை கிணறுகளிலிருந்து வரும் தண்ணீர் பயன்படுத்த முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்தப் பகுதிகளில் குடிநீருக்கு அரசு செய்த மாற்று ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வீரக்கல் புதூர் பேரூராட்சியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின்கீழ் விநியோகக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.